**O.S.No.47/2016**

**PW.1** பாலமுருகன்

04-06-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தமிழ்நாட்டில் தொழில் மேம்பாட்டிற்காக டைடல் பார்க் அமைக்கப்பட்டு, அதில் புதிய நிறுவனங்கள் தொழில் நடத்துவதற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வரி விலக்கு எங்கள் நிறுவனத்திற்கும் பொருந்தும் என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.6 ல் 4 வது பக்கத்தில் 1.3 வது பாராவில் வரிவிலக்கு உட்பட்ட பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால் வாங்கப்படும் பொருட்களுக்கு நாங்கள் வரி கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் பிரதிவாதி எங்கள் நிறுவனத்திடமிருந்த எந்த வரியையும் வாங்கிக் கொள்ள முடியாது என்று சொன்னால் சரிதான். வரி விலக்கு சம்மந்தமான உத்திரவை நாங்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்று அதை பிரதிவாதியிடம் நாங்கள் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.6 ன் அடிப்படையில் அரசாங்கத்திமிருந்து எங்களுக்கு உத்திரவு வரப் பெற்றுள்ளது. வரி விலக்கு கேட்டு அரசாங்கத்திடம்நாங்கள் விண்ணப்பிக்கும் பொழுது அதற்கென சில நடைமுறைகள் உள்ளது. அதனைப் பின்பற்றி உத்திரவு வாங்குவதற்கு பல காலம் ஆகும். உத்திரவு கிடைக்கப் பெற்றவுடன்தான் அதை பிரதிவாதியிடம் ஒப்படைக்க முடியும். இந்த விவரம் பிரதிவாதியிடம் தெரியப்படுத்தித்தான் வா.த.சா.ஆ.6 ம் ஏற்பட்டது. வா.த.சா.ஆ.6 ல் அவ்வாறான வாசகம் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

ஆனால் நாங்கள் பிரதிவாதிகளிடம் அதைப் பற்றி விளக்கி கூறியுள்ளோம். வரி விலக்கு உத்திரவு பெற்ற பின்னர்தான் எங்கள்நிறுவனத்தின் சார்பாக இண்டீரியர் வேலை செய்வதற்கு பிரதிவாதி நிறுவனம் பொருட்களை வாங்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், வரி விலக்கு உத்திரவு வந்த பின்னர்தான் பொருட்கள் வாங்கப்பட்டு உள் கட்டமைப்பு வேலைகளை செய்ய முடியும் என்றும் ஆனால் வழக்கிற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வரி விலக்கு உத்திரவானது வரி விலக்கு உத்திரவின் நகலை நாங்கள் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளோம். 03-02-2015 அன்று நாங்கள் கொடுத்தோம். எங்கள் நிறுவனத்திற்கு சிபில்ட் ஏசி பொருத்துவதற்குதான் பிரதிவாதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் சிபில்ட் ஏசி அமைப்பதற்கு டைடல் பார்க் நிறுவனம் அனுமதி அளிக்க மறுத்து விட்டது என்று சொன்னால் சரிதான். எப்பொழுது அவர்கள் மறுத்தார்கள் என்று சரியாக தற்போது நினைவில்லை. அதனால் duct type AC மட்டும்தான் பொருத்தவேண்டுமென்று டைடல்பார்க் நிறுவனம் கூறியது என்று சொன்னால் சரிதான். அதனால் duct type AC யை செய்து கொடுக்குமாறு பிரதிவாதியிடம் நாங்கள் கேட்டோம். அதற்கு பிரதிவாதி நிறுவனம் அவர்கள் அதை செய்வதில்லை என்று எங்களிடம் தெரிவித்தார்கள். அதன் காரணமாக duct type AC பொருத்துவதற்கு வேறு ஒரு நிறுவனத்தை நாங்கள் அணுகினோம். பொதுவாக ஸ்பில்ட் ஏசி பொருத்துவதற்கும் duct type AC பொருத்துவதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக duct type AC அறையின் நடுவில் போடப்பட்டு இருபுறங்களிலும் களிர்ந்த காற்று வருமாறு அமைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். duct type AC யை அறைகளில் பொருத்திய பின்னர்தான் பால்ஸ்

சீலிங் போட முடியும் என்று சொன்னால் சரிதான். 03-03-2015 ல் duct type AC பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு 16-03-2015 ல் முடிக்கப்பட்டது. ஸ்பிலிட் ஏசி வைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு duct type AC பொருத்தி பணி முடிவடையும் வரையில் ஏற்பட்ட காலதாமதத்தை வாதி நிறுவனம்தான் பொருப்பு என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் உள் கட்டமைப்பு செய்வதற்கு தேவையான பொருட்களின் விவரங்களை எங்களிடம் பிரதிவாதி நிறுவனம் சமர்ப்பித்து எங்களிடம் அனுமதி பெற்ற பின்னர்தான் அவர் பொருட்களை வாங்கி வேலை செய்ய முடியும் என்று சொன்னால் அந்த விவரங்கள் வா.தா.சா.ஆ.6 ஒப்பந்தத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. பொருள் வாங்குவதில் ஏதாவது சந்தேகம் வரும் பட்சத்தில் மட்டும்தான் எங்களிடம் அவர்கள் கேட்பார்கள். சந்தேகம் நிவர்த்தி ஆகி நாங்கள் அனுமதித்த பின்னர்தான் பொருட்களை வாங்கி வேலைகளை செய்து கொடுப்பார்கள். பிரதிவாதி நிறுவனம் ஒவ்வொரு பொருளையும் உள்ளே எடுத்துச் செல்லும் பொழுது டைடல் பார்க் நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டுமென்று சொன்னால் சரிதான். அந்த அனுமதியைப் பெற்ற பின்னர்தான் பிரதிவாதி பொருட்களை உள்ளே கொண்டு வந்தார் என்று சொன்னால் சரிதான். டைடல் பார்க் நிறுவனம் சில முன்னனி நிறுவனங்களின் பொருட்களை மட்டும்தான் உள்ளே அனுமதிப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. தர ஐ.எஸ்.ஐ முத்திரை உள்ள பொருட்களை மட்டும்தான் உள்ளே அனுமதிப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், சந்தையில் பிரபலமாக இருக்கும் பொருட்களை வாங்குவதற்கு மட்டும்தான் டைடல் பார்க் அனுமதிப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதைத் தவிர வேறு பொருட்களை உள்ளே கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. டைடல் பார்க் நிர்வாகத்தின்

அனுமதி இல்லாமல் எந்த பொருளையும் வெளியே எடுத்துச் செல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி என்ன என்ன பொருட்களை உள்ளே கொண்டு வந்தார் என்று டைடல்பார்க் நிர்வாகம் எங்களுக்கு லிஸ்ட் கொடுப்பார்கள் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி கொண்டு வந்த பொருட்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்து இருந்தால் அவர் அந்த பொருளை பயன்படுத்துவதற்கு முன்னரே எங்களால் தடுத்திருக்க இயலும் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி நிறுவனம் எவ்விதமான குறைபாடு உள்ள பொருட்களை கொண்டு வரவில்லை என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.6 ல் ஒப்புக் கொள்ளப்பட்ட பணிகளைத் தவிர வேறு ஏதாவது பணிகள் நடைபெற்றால் அதற்கு டைடல் நிர்வாகத்திடமும், எங்களுடைய நிர்வாக அதிகாரிகளிடமும் கலந்து பேசி அதன் பின்னர்தான் பிரதிவாதி நிறுவனம் வேலை செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல. Duct type AC அமைப்பதற்கு டைடல் பார்க் நிறுவாகனத்திடம் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை. நான் கூறுவது தவறு என்றும், duct type AC அமைப்பதற்கு டைடல் பார்க் நிறுவனத்திடம் அனுமதி பெற்ற பின்னர்தான் பொருத்தமுடியும் என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய பொருட்களை அவரது அனுமதியில்லாமல் நாங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று வா.த.சா.ஆ.6 லேயே சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறுதான் சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அந்த பொருட்களுக்கு நாங்கள் பிரதிவாதிக்கு பணம் செலுத்தியிருந்தால் அவர் அனுமதி இல்லாமல் நாங்கள் அதை பயன்படுத்தலாம். ஆனால் அதைப் பற்றி வா.த.சா.ஆ.6 ல் எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். எந்த எந்த பொருட்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது, எப்பொழுது கொடுக்கப்பட்டது போன்ற

விவரங்களை என்னால் குறிப்பாக கூற இயலாது.  பொங்கல் தினத்தன்று டைடல் பார்க் நிறுவனத்திற்கு விடுமுறை விடப்பட்டுள்ளது என்று சொன்னால் டைடல் பார்க் ஆபீசுக்கு விடுமுறை இருக்கும். டைடல்பார்க்கில் உள்ள நிறுவனங்களுக்கு அவ்வாறு இருக்காது. பொங்கல் அன்று  டைடல் பார்க் வளாகத்தில் வேலை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒம்/ பாலமுருகன்

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.